# <u>கள்ளக்குறிச்சி நகராட்சி</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 பிப்ரவரி மாதம் 28 ம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**கூட்ட பொருள்கள்**

| |
|---|
| **<u>பொருள் எண் – 01</u>** |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1ல் உள்ள புல எண் 246/3எ2, 246/3டி, 247/1டி, 249/2எ2, 249/2பி1பி–ல் அமைந்துள்ள அனுமதியற்ற ஆசிரியர் நகர் மனைப்பிரிவில் உள்ள 82 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.இ (வி.ம) எண் 03/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூஙகாவினையும், சாலையினையும் இந்நகராட்சிக்கு ஆவண எண் 194/2018ன் மூலம் தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார். கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடமும், தான சொட்டில்மென்ட் ஆவணமும் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கான வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் அ1/2721/2017 |
| **<u>பொருள் எண் – 02</u>** |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1ல் உள்ள புல எண் 139/8pt, 193/9 pt, 193/10 pt, 193/11 pt-ல் அமைந்துள்ள அனுமதியற்ற வள்ளி முருகன் நகர் மனைப்பிரிவில் உள்ள 30 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஷ.ம.வ./ந.ஊ.உ. இ (வி.ம) எண் 12/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்காவினையும், சாலையினையும் இந்நகராட்சி ஆவண எண் 192/2018ன் மூலம் தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார். கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடமும், தான செட்டில்மெண்ட் ஆவணமும் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கான வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் அ1/2721/2017 |
| **<u>பொருள் எண் – 03</u>** |
| வார்டு வரையறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல்படி இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும், தெருக்கள் / நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணையத்தின் பரிசீலனைக்குப்பி. பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துருக்களை குறிப்பிட்டு இந்நகராட்சியிலும், மாவட்ட ஆட்சித்தலைவரிடமும் மற்றும் மறுவரையறை ஆணையத்திலும் நேரடியாகவும்/தபால் மூலமும்/ மின்னஞ்சல் வழியாகவும் 88 மனுக்கள் வரப்பெற்றது. மேற்கண்டவாறு |

வரப்பெற்ற மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மறு ஆய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. இதன்படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுவதுடன், இக்கருத்துருவினை மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 3064/2017/ஏ1

## பொருள் எண் – 04

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் எண் கூசூ 32ரு 8542க்கு தகுதி சான்று பெற மேற்கொள்ள வேண்டிய பணிகள் பொது முதலாள் அரசு தானியங்கி பணிமனைகளில் அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விட்டு பழுது நீக்கம் செய்வதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிமனையின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | எஸ்.கே.எஸ். மோட்டார்ஸ்,சேலம் மெயின் ரோடு தச்சூர் கள்ளக்குறிச்சி | 179150/- |
| 2. | ஓம்.முருகா ஆட்டோ டீசல் லேபர் ஒர்க்ஸ் | 185400/- |
| 3. | வேலவன் ஆட்டோ டீசல் லேபர் ஒர்க்ஸ், சேலம் மெயின் ரோடு கள்ளக்குறிச்சி | 183500/- |

அலுவலக குறிப்பு

1. TN32 U8542 வாகனத்தை பழுதுநீக்கம் செய்ய மேற்கண்டுள்ள 3 பணிமனைகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள எஸ்.கே.எஸ். மோட்டார்ஸ்,சேலம் மெயின் ரோடு தச்சூர் கள்ளக்குறிச்சி அவர்களிடம் வாகனத்தை பழுதுநீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்
2. பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தகுதி சான்று முடிவடைந்துள்ளதால் தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   ந.க.எண்.அ4/2748/2017

## பொருள் எண் – 05

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள, வேலூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்கள் 07.02.2018ந் தேதி இந்நகராட்சியில் நேரடி தல ஆய்வின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகத்தினை மராமத்து பணிகள் செய்தல் | 8.50 |
| 2. | நகராட்சி அலுவலகத்தின் மேல்புறத்தில் புதியதான இரும்பிலான ஷீட் தளம் அமைத்தல் | 9.80 |

மேற்காணும் விவரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு நிர்வாக அனுமதியும், இப்பணிகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து

மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி உடனடியாக பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2018 / இ1)**

## பொருள் எண் – 06

அரசாணை எண்.154, நாள்:09.08.2010ன் கள்ளக்குறிச்சி நகராட்சியானது முதல் நிலை நகராட்சியாக 2011ம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 51,507 ஆகும். இந்நகராட்சி மொத்தம் 11.69 சதுர கி.மீ பரப்பளவில் 21 வார்டுகளைக் கொண்டது. இந்நகரில் சுமார் 17,147க்கும் மேற்படி குடியிருப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. இதன் மூலம் நாள் ஒன்றிற்கு சுமார் 20 மெட்ரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டுவருகிறது. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் தோற்றுவிக்கப்பட்ட 68 துப்புரவு பணியாட்களில் 47 துப்புரவு பணியாளர்களே பணிபுரிந்து வருகின்றனர். அதில் 21 பணியிடங்கள் காலியாக உள்ளது. அரசாணை எண்.101, நாள்:30.04.1997ன் படி இந்நகராட்சியில் திடக்கழிவு பணிகளை செய்ய 189 துப்புரவு பணியாளர்கள் தேவை (கணக்கீட்டுப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது), தற்போது உள்ள பணியாளர்களை கொண்டு தினசரி உருவாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை விதி 2016ன் படி அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனத்தாரரிடமிருந்து குப்பையை தரம்பிரித்து வாங்கும் பணியினை சிறப்பாக செவ்வனே செய்ய இயலாமல் திடக்கழிவுப் பணிகளில் பெரும் பின்னடைவு ஏற்படுகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைப் போக்க திடக்கழிவுப் பணிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளை மேற்கொண்டு தனியார் ஒப்பந்ததாரர் மூலம் செய்து கொள்ளவும், அதற்கான உரிய அனுமதியை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பெற்று பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அரசாணை எண்.101 , நாள்:30.04.1997ன் படி தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சியில் 189–47=142 துப்புரவு பணியாளர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி பணிகளை மேற்க்கொள்ள வேண்டியுள்ளது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றிற்கு நிர்ணயம் செய்த கூலி ரூ.341/– என்ற அடிப்படையில் ஆகும் செலவினம் மாதம் ஒன்றிற்கு ரூ.18,61,003/– ஆகும். துப்புரவு பணியாளரை நிரந்தர பணியாளராக நியமிக்க மாதம் ஒன்றிற்கு ஆகும் செலவினம் ரூ.2460150/– மற்றும் கூடுதலாக விடுப்புகள், சீருடை, போனஸ் போறவற்றை வழங்க வேண்டியுள்ளது, எனவே தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளும் பட்சத்தில் செலவு குறைவாகிறது.

இந்நகராட்சியில் 21 துப்புரவு பணியிடங்கள் காலியாக உள்ளது. இந்நகராட்சி சேலம் to சென்னை தேசிய நெடுஞ்சாலை எண். 79ல் அமையப்பட்டுள்ள இந்நகரை மையமாக கொண்டு சுமார் 400 கிராமங்களும் கல்வராயன் மலை மற்றும் இரண்டு சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ளது. மேலும் இங்கு தினசரி வந்து செல்லும் மக்களின் எண்ணிகை 25000 ஆகும். மேற்கண்ட சூழ்நிலையில் கள்ளக்குறிச்சி நகராட்சியில் அரசாணை நிலை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) நாள்:30.04.1997ன் அளவுகோலின் படி தேவையான 142 தற்காலிக துப்புரவு பணியாளர்களை தனியார் ஒப்பந்த அடிப்படையில் நகராட்சியில் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதிக்கு அனுப்பலாம்.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.அ4/2456/2018)**

## பொருள் எண் – 07

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 04 க.மாமனமந்தல் சாலை வாய்க்கால் மேட்டுத்

தெரு பகுதியானது மேட்டு பகுதியாக உள்ளதால், அப்பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் செல்லாமல் உள்ளதை, கள்ளக்குறிச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் தல ஆய்வின் போது தெரிவிக்கப்பட்டு, அப்பகுதிக்கு உடனடியாக தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்படி பகுதிக்கு ராஜா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து புதியதாக குடிநீர் குழாய் அமைத்து வார்டு எண். 04ல் உள்ள பகுதிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட, ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளரால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உத்தேசிக்கப்பட்டது. எனவே, மேற்படி பகுதியில் புதியதாக குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 95,000/- (ரூபாய் தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு நிர்வாக அனுமதிக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தனிஅலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 331 / 2018 / இ1)**

## பொருள் எண் – 08

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் புணரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 07.01.2018 அன்று திறப்பு விழா செய்யப்பட்டது. அதற்கான விளம்பரத்தினை வெளியிட்ட தினத்தந்தி, மக்கள் குரல் மற்றும் தினமலர் நாளிதழ்களுக்கான பட்டியல் தொகையினை தனிதனியே செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எ | நாளிதழ் பெயர் | பட்டியல் விபரம் | பட்டியல் தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | CDL1718-0007096 | 33654 |
| 2 | தினமலர் | RRA0025 | 34650 |
| 3 | மக்கள் குரல் | MAB0708058957 | 10500 |
| 4 | தினகரன் | 330049528 | 38981 |
| 5 | தினமணி | VPMTN90012000 | 16800 |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட விளம்பரம் வெளியிட்ட நாளிதழ்களிடமிருந்து வரபெற்ற பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/ 135 / 2018

## பொருள் எண்–09

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள 27.02.2018ம் தேதியன்று பொது மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும்

உரிமையாணைக்கு ஏலக்கேள்வி கோரிய விபரம் பின்வருமாறு–

**இனம்– 1 பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கான தினசரி கட்டண வசூல் உரிமம்**

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் / முகவரி (திரு / திருமதி) | இறுதி ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | ஜி.மரியதாஸ், த/பெ கணேசன்<br>15– சிறுவங்கூர் ரோடு,<br>கள்ளக்குறிச்சி | 16,49,000 | -- |
| 2 | எம்.தங்கராஜ், த/பெ மரியப்பிள்ளை<br>39– சிறுவங்கூர் ரோடு | 17,40,000 | -- |
| 3 | எஸ்.வெற்றிவேல் த/பெ சக்திவேல்<br>132/6– மூப்பனார் கோயில் தெரு, ஏமப்பேர் | 17,19,000 | -- |
| 4 | இ.கண்ணன் த/பெ ஏழுமலை சிறுகிராமம் | 17,45,000 | 17,45,000 |
| 5 | பத்மாவதி க/பெ மகாலிங்கம் ஜோதி வள்ளலார் தெரு | -- | -- |

**இனம்– 2 பேருந்து நிலைய கட்டண கழிவறை கட்டண வசூல் உரிமம்**

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் / முகவரி (திரு / திருமதி) | இறுதி ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | டி.சுரேஷ் த/பெ துரை<br>15–ஏ சிறுவங்கூர் ரோடு | 10,95,000 | 10,95,000 |
| 2 | எம்.பச்சையாப்பிள்ளை த/பெ முருகேசன்<br>188–புதிய காலனி, கருணாபுரம் | 10,90,000 | -- |

**இனம்– 3 தினசரி நாளங்காடி கட்டண கழிவறை கட்டணம் வசூல் உரிமம்**

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் / முகவரி (திரு / திருமதி) | இறுதி ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | எம்.கணேசன்<br>கஸ்தூரிபாய் தெரு | 3,08,000 | -- |
| 2 | எம்.பாஸ்கர் த/பெ மகாலிங்கம்<br>25ஏ/1– சிறுவங்கூர் ரோடு<br>(கோட்டைமேடு) | 3,10,000 | 3,10,000 |

**இனம்– 4 சாலையோர சுங்கம் வசூல் உரிமம்**

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் | ஒப்பந்தப் புள்ளி | இறுதி ஏலக் கேள்வி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி |
|---|---|---|---|---|

| | / முகவரி (திரு / திருமதி) | தொகை ரூ. | தொகை ரூ | ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கே.சீனுவாசன் த/பெ என் கண்ணன் 136 F/2 – கேசவலு நகர் | -- | 52,00,000 | -- |
| 2 | சி.வேல்மணி த/பெ சின்னதம்பி 186/ஏ– புதிய காலனி, கருணாபுரம் | -- | 22,65,000 | -- |
| 3 | ஜே.முஸ்தபா த/பெ ஜான் பாஷா 197– காந்திசாலை | -- | 22,60,000 | -- |
| 4 | எம்.செல்வராஜ் த/பெ மாரி 15–பி, சிறுவங்கூர் ரோடு | -- | 50,00,000 | -- |
| 5 | கே.முருகேசன் த/பெ காசிநாதன் 67 சி– தென்கீரனூர் ரோடு, ஏமப்பேர் | -- | 55,05,000 | 55,05,000 |
| 6 | எஸ்.கோபிகிருஷ்ணன், த/பெ சேகர் 2–பி, சிறுவங்கூர் ரோடு | -- | 40,01,000 | -- |
| 7 | சி.சுப்ரமணியன் த/பெ சின்னாமூப்பர் 39–கே, குளத்து மேட்டு தெரு, கள்ளக்குறிச்சி | -- | 46,00,000 | -- |
| 8 | வி.சரவணன் த/பெ வடிவேல் 7/இ/27பி– கீழ்த்தக்கா சுந்தரவிநாயகர் கோயில் தெரு,கள்ளக்குறிச்சி | 55,01,000 | -- | --- |

**இனம்– 5 பேருந்து நிலைய இரு சக்கர வாகன நிறுத்துமிட கட்டண வசூல் உரிமம்**

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் / முகவரி (திரு / திருமதி) | இறுதி ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | சி.சக்திவேல் த/பெ சின்னபையன் 15–டி ஏமப்பேர் | 2,83,000 | -- |
| 2 | கே.சீனுவாசன் த/பெ கண்ணன் 136F/2– கேசவலு நகர் | 2,81,000 | -- |
| 3 | வி.கிரிராஜீ த/பெ வெங்கடசன் ஜி–4 ராயல் அப்பார்ட்மெண்ட், அண்ணாநகர் | 2,82,000 | -- |
| 4 | எம்.செந்தில்குமார் 2–250, புது பள்ளிவாசரல் | 2,84,000 | 2,84,000 |

| | | | |
|---|---|---|---|
| | தெரு, தேவபாண்டலம், சங்கராபுரம் | | |

## இனம்– 6 பேருந்து நிலைய நடைபாதையில் தொலைகாட்சி பெட்டியின் மூலம் வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமம்

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் / முகவரி (திரு / திருமதி) | இறுதி ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | பி.செந்தில் குமார், த/பெ பெருமாள்<br>126– சிதம்பரம் பிள்ளைதெரு | 55,000 | -- |
| 2 | இ.கார்த்தி த/பெ இளஞ்செழியன்<br>12– பள்ளி முன்புறம், வஉசி நகர் | 50,000 | -- |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்டுள்ள குத்தகை இனங்களில் வ.எண் 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு உயர்ந்த ஏலக்கேள்வி கோரியவர்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு 2018–2021ம் ஆண்டுக்குரிய ஏல நிபந்தனைகள் மற்றும் சேவை வரி வருமானவரி மற்றும் அரசு விதிகளுக்குட்பட்டு குத்தகை உரிமம் ஏலம் கோரிய தொகையினை முழுமையாக செலுத்திய பிறகு அனுபவித்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இனம் எண் 6 பேருந்து நிலைய தொலைக்காட்சி விளம்பர ஏலக்கேள்வி குறைவாக உள்ளதால் மறு ஏலம் விடலாம்.

**ந.க.எண் 3111/2017/அ2**

**எண் – 10**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2017–2018ன்கீழ், சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தினசரி நாளிதழ் (All Editions in Tamil Nadu) மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் (All Editions in Tamil Nadu)–ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில், 06.02.2017 அன்று தினமணி மற்றும் டிரினிட்டி மிரர் ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.73154/ஐ வழங்கக் கோரி M/s கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்டரிஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண் 2362 நாள் 06.12.2017ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்டரிஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2180/2017/இ1

**பொருள் எண் – 11**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் வார்டு பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கும், பொதுமக்கள் வந்து செல்வதற்கு மிகுந்த சிரமமாக உள்ளதால், அந்த சாலைகளை புதியதாக அமைத்திட ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேரடி தல ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ராஜா நகர் ராஜா திரையரங்கம் பின்புறம் சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 05) | 8.00 |
| 2. | திருவரங்கம் நகர் குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 10) | 5.00 |

மேற்காணும் விவரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு நிர்வாக அனுமதியும், இப்பணிகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி உடனடியாக பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.              / 2018 / இ1 )**

**த அலுவல**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**